## இலங்கை நியமங்கள் நிறுவகம் - 2017

---

இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்தினத்தில் முடிவுற்ற ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதன மாற்றக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளதும் ஏனைய விளக்கமளிக்கும் தகவல்களதும் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1984 ஆம் ஆண்டின் 06 ஆம் இலக்க இலங்கை நியமங்கள் நிறுவக அதிகாரச்சட்டத்தின் 37(3) என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம், எனது பணிப்பின் கீழ், கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் நிறுவகத்தின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புரைகளும் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக்க கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிடப்பட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளன. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிறுவகத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிறுவகத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் அளவையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

## 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் சுட்டிக் காட்டப்பட்ட விடயங்களினாலான தாக்கத்தினைத் தவிர, இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் 2017 டிசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிச் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 இலங்கை கணக்கீட்டு நியமங்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**(அ) இலங்கை கணக்கீட்டு நியமம் 02**

நியமத்தின் 9 ஆம் பந்தியின் பிரகாரம் கையிருப்பானது அதன் கிரயம் அல்லது நிகர தேறத்தகு பெறுமதியில் எது குறைவானதோ அதனடிப்படையிலேயே தெரிவிக்கப்பட வேண்டுமாயினும், நிதிக் கூற்றுக்களில் காணப்படும் ரூபா 17,499,471 கையிருப்பில் உள்ளடங்கிய ரூபா 1,338,348 கிரயமுடைய சிறு கருவிகளும் உபகரணங்களும் அவ்வாறு பகுப்பாய்வு செய்யப்படவில்லை.

**(ஆ) இலங்கை கணக்கீட்டு நியமம் 07**

நியமத்தின் 07 ஆம் பந்தியின் பிரகாரம் மீளாய்வாண்டினது டிசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 578,000,000 பெறுமதியான மீள் கொள்வனவுச் சந்தை முதலீடுகள் மற்றும் ஏழு நாள் அழைப்பு வைப்பு முதலீடாகிய ரூபா 10,000,000 என்பவற்றை காசு மற்றும் காசுக்கு நிகரானவையாகக் காட்டுவதற்குப் பதிலாக ஏனைய நடைமுறைச் சொத்தாக நிதி நிலைமைக் கூற்றில் காட்டப்பட்டிருந்தது.

**(இ) இலங்கை கணக்கீட்டு நியமம் 39**

நியமத்தின் 46(அ) பந்தியின் பிரகாரம், கடன் மற்றும் பெற வேண்டியன என்பன ஆக்கபூர்வமானதும் வட்டியை ஈட்டும் வட்டி வீதமும் அருகிச் செல்லும் தேய்மானப்படி காலக் கழிவு செய்யப்பட வேண்டுமாயினும், நிதிக் கூற்றுக்களில் காணப்படும் 5 ஆண்டுகளுக்கு மேற்பட்ட 362 கடன்பட்டோர் மீதியாகிய ரூபா 33,057,304 சம்பந்தமாக அவ்வாறு நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2014 ஆம் ஆண்டில் மின்சக்தி மற்றும் வலு அமைச்சிற்கு நிதியத்தின் 05 ஊழியர்கள் விடுவிக்கப்பட்டு சம்பளமாக ரூபா 663,675 வழங்கப்பட்டிருந்த போதிலும் 2018 யூன் வரை அத்தொகையை அமைச்சிடமிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

(ஆ) 1992 முதல் 2014 வரையான காலப்பகுதியின்போது கடன்பட்டோரிடமிருந்து பெறபட்டு கொடுப்பனவு மறுக்கப்பட்ட ரூபா 382,910 கூட்டுத் தொகையுடைய 10 காசோலைகளைத் தீர்வு செய்வதற்கான நடவடிக்கை 2018 ஆகஸ்ட் வரை நடைபெறவில்லை.

(இ) மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காணப்படும் ரூபா 5,927,891 நிறுத்தி வைத்த தொகை மீதியில் உள்ளடங்கிய 14 மீதிகளான ரூபா 1,182,511 விடுவிக்கப்பட வேண்டிய காலம் முடிவடைந்து 04 ஆண்டுகள் 08 மாதங்களாகியும் அம் மீதியைத் தீர்வு செய்வதற்கு 2018 ஆகஸ்ட் மாதமளவிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமை அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் தாபன விதிக் கோவையினது xxxii அத்தியாயத்தின் 1.1. மற்றும் 1.3 ஆம் பிரிவுகள் | நிறைவேற்றுதர உத்தியோகத்தர் ஒருவர் அரசியலில் ஈடுபட முடியாததுடன் அவ்வாறானதொரு உத்தியோகத்தர் தேர்தலில் கலந்து கொள்ள எண்ணுவாராயின் அரச வேலையில் தான் வகிக்கும் பதவியில் இருந்து விலக வேண்டும். எனினும், உதவிப் பணிப்பாளராகப் பணியாற்றிய உத்தியோகத்தர் ஒருவருக்கு 2018 பெப்ரவரி 10 ஆந் திகதிய உள்ளூராட்சித் தேர்தலில் அபேட்சகராகக் கலந்து கொள்வதற்கு 2017 டிசெம்பர் 21 முதல் 2018 பெப்ரவரி 10 வரை சம்பளமற்ற விடுமுறை வழங்கப்பட்டிருந்தது. |
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நிதிப்பிரமாணம் 802(2) மற்றும் 1647 (உ) | ஒவ்வொரு வாகனத்தினதும் வகை, வடிவமைப்பு, பதிவு இலக்கம், கொள்வனவுத் திகதி, கிரயம், வழங்கப்பட்ட திகதி, ஒப்படைக்கப்பட்ட திகதி, அவ்வப்போது மேற்கொள்ளப்பட்ட பழுதுபார்த்தல்கள் ஆகிய விபரமடங்கிய வாகனப் பதிவேடு பேணப்படவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 110 | நட்டங்கள், இழப்புகள் தொடர்பான பதிவேட்டை நிறுவகம் பேணவில்லை. |

| | | |
|---|---|---|
| (iii) | நிதிப்பிரமாணம் 1645(இ) மற்றும் 1646 | நிறுவகத்தின் வாகனங்கள் சம்பந்தமாக 268 (அ) பொதுப் படிவத்தின் பிரகாரம் பிரயாணம் தொடர்பான மாதாந்தப் பொழிப்பு பூர்த்தி செய்யப்படவில்லை. |
| (இ) | 2015 மே 15 ஆந் திகதிய மு.அ 01/2015/01 ஆம் இலக்க நிதி அமைச்சினது சுற்றறிக்கை 4(அ)(1)(iii) ஆம் பிரிவு | வெளிநாட்டுப் பயணத்தின்போது சீவனப்படி வழங்கப்படுகையில் இரண்டாவது வகுப்புக்கு உரித்துடைய உத்தியோகத்தர்களுக்கு முதலாம் வகுப்பிற்குரிய சீவனப்படி வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் மீளாய்வாண்டில் 14 சந்தர்ப்பங்களில் பங்குபற்றிய உத்தியோகத்தர்களுக்கு சீவனப்படியாக ரூபா 919,933 கூடுதலாக வழங்கப்பட்டிருந்தது. |
| (ஈ) | 2006 மே 30 ஆந் திகதிய 9/2006 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | சிற்றூழியர்களது கடமை நேரம் 08 முதல் 16.45 வரையானது. ஏனைய ஊழியர்களது கடமை நேரம் 8.30 முதல் 16.15 வரையானது. எனினும், நிறுவகத்தின் சகல ஊழியர்களும் 8.45 வரை வருகை தருவதற்கு இடமளிக்கப்பட்டிருந்தபோதும், தாமதமாகும் நேரத்தை ஈடு செய்யக்கூடியவாறான விதிமுறைகள் அமுலாக்கப்படவில்லை. |

## 2.5 போதிய அதிகாரத் துணையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

2000 சனவரி 11 ஆந் திகதிய பீஎப்/பீஈ/05 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 1994 யூன் 14 ஆந் தகிதிய 95 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கைகளின் பிரகாரம் திறைசேரியின் அங்கீகாரமின்றி பணிப்பாளர் சபையினது தீர்மானம் மாத்திரமே பெறப்பட்டு நிறுவகத்தின் பதவியணியினருக்கு ஊக்குவிப்புப்படி, கோல உடைகளுக்கான படி, வார இறுதிப் படி, மற்றும் சேமிக்கப்பட்ட விடுமுறைகளுக்கான படி என மீளாய்வாண்டின்போது முறையே வழங்கப்பட்டிருந்த தொகை ரூபா 25,024,326, ரூபா 4,605,043, ரூபா 3,530,025 மற்றும் ரூபா 1,988,465 என்பனவாகும்.

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிறுவகத்தின் நிதிப் பெறுபேறு ரூபா 125,931,329 மிகை ஆகும். இதற்கொப்பான முன்னைய ஆண்டின் மிகை ரூபா 163,483,894 ஆகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டினது நிதிப் பெறுபேற்றில் ரூபா 37,552,565 நலிவு தென்பட்டது. நிறுவகத்தின் முதலீட்டு வருமானம் ரூபா 18,923,181 அதிகரித்தபோதும், செயற்பாட்டு வருமானம் ரூபா 22,224,157 குறைந்தும் செயற்பாட்டுச் செலவினம் ரூபா 25,742,569 அதிகரித்திருந்தமையுமே நிதிப் பெறுபேற்று நலிவுக்கான பிரதான காரணமாகும்.

மீளாய்வாண்டினதும் முன்னைய 4 ஆண்டுகளினதும் நிதிப்பெறுபேறுகளைப் பகுப்பாய்வு செய்கையில், 2013 ஆம் ஆண்டில் ரூபா 96,751,550 ஆகவிருந்த மிகை தொடர்ந்து அதிகரித்து 2016 ஆம் ஆண்டில் ரூபா 163,483,894 ஆகியபோதும், 2017 ஆம் ஆண்டில் 125,931,329 வரை குறைவடைந்திருந்தது எவ்வாறாயினும், நிதிப்பெறுபேற்றில் ஊழியர்களது ஊதியம், அரசாங்கத்திற்குச் செலுத்தப்பட்ட வரி, நடைமுறை அல்லாத சொத்துக்களுக்கான

தேய்மானம் என்பன மீண்டும் சீராக்கல் செய்யப்பட்டதன் பின்னர் 2013 ஆம் ஆண்டினது ரூபா 385,973,930 பங்களிப்பானது 2016 ஆம் ஆண்டில் ரூபா 629,302,100 வரை அதிகரித்தபோதும், 2017 ஆம் ஆண்டில் அது ரூபா 598,375,530 வரை குறைவடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

பொருட்களைச் சான்றுறுதிப்படுத்தும் முறைக்கமைய கணக்காய்வைத் திட்டமிடுதல் சம்பந்தமான வழிகாட்டியின் (TG-CP-04) பிரகாரம் செயற்திட்ட உத்தியோகத்தரால் உற்பத்தி நிறுவனங்களது கணக்காய்வு மேற்கொள்ளப்படுகையில் குறித்த கணக்காய்வுத் திட்டமானது கணக்காய்வு மேற்கொள்ளப்படுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னரேயே அனுமதிப்பத்திரத்தையுடைய உற்பத்தியாளருக்குச் சமர்ப்பிக்கப்பட்டு அது உறுதி செய்யப்பட்டு அதற்கான நாளொன்று ஒதுக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், இவ்வாறு ஏற்கனவே அறிவிப்பதன் மூலம் கணக்காய்வின் மூலம் சாதகமான பெறுபேறுகளை அடைய முடியுமா என்பது கேள்விக்குரியதாகும்.

#### 4.1.2 செயற்பாடும் மீளாய்வும்

பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் நியமத்தையும் நிலைமையையும் முன்னேற்றமடையச் செய்வதன் மூலம் மக்களது வாழ்வில் நலன்களை அதிகரிப்பதற்குத் தலைமைத்துவம் வழங்கும் நாட்டின் பிரபல் நிறுவனமாக இயங்குவது நிறுவனத்தின் தொலை நோக்கானபோதும், நிறுவனத்தின் செயலாற்றலைப் பகுப்பாய்வு செய்கையில் அதற்கெனப் போதியளவு நடவடிக்கைகளை மேற்கொண்டிராமை அவதானிக்கப்பட்டது.

**(அ) சந்தையில் தெரிவுச் செவ்வைகளை மேற்கொள்ளுதல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) இலங்கை நியமங்கள் நிறுவக அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் நுகர்வுக்காக உள்ள உற்பத்திகளது நிலைமையைச் சான்றுறுதிப்படுத்துவது நிறுவகத்தின் பிரதான பணியாகியபோதும், அதன் பொருட்டு சந்தையில் தெரிவுச் செவ்வைகளை மேற்கொள்வது முக்கிய பணியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ii) இலங்கை நியமங்கள் சான்றுறுதியை வழங்குதல் மற்றும் மேற்பார்வை செய்தல் சம்பந்தமாக வெளியிடப்பட்ட GL-CR-06 இலக்க வழிகாட்டியின் பிரகாரம் தெரிவுச் செவ்வைத் திட்டத்திற்கமைய சந்தையில் தெரிவுச் செவ்வைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். மீளாய்வாண்டில் ரூபா 1,500,000 நிதியேற்பாட்டுடன் 60 சந்தைத் தெரிவுச் செவ்வைகளை மேற்கொள்ளத் திட்டமிட்டிருந்தபோதும், அது தொடர்பாக விரிவான திட்டம் தயாரிக்கப்பட்டிராததுடன், ஏறக்குறைய 850 அனுமதிப்பத்திரங்களைக் கொண்டிருப்பவர்களுக்கிடையே திட்டமிடப்பட்டிருந்த 60 தெரிவுச் செவ்வைகளில் 39 மாத்திரமே மேற்கொள்ளப்பட்டிருந்தன.

**(ஆ) டின் மீன்களது நியமத்தை பரிசீலித்தல்**

(i) மீளாய்வாண்டின் போது 144 சந்தர்ப்பங்களில் வெளிநாட்டு உற்பத்திக் கம்பனி ஒன்றிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 8,321,190 கிலோ கிராம் டின் மீன்களில் 49 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட 7,878,766 அமெரிக்க டொலர் பெறுமதியுடைய 2,406,088 கிலோகிராம் டின் மீன்கள்

தெரிவுச் செவ்வைக்குள்ளாகி இருந்தன. எவ்வாறாயினும், அவற்றுள் இறக்குமதி செய்யப்பட்ட 7,287,075 அமெரிக்க டொலர் பெறுமதியுடைய 2,019,581 கிலோகிராம் டின் மீன்களுக்கு 42 சந்தர்ப்பங்களில் இலங்கை நியமங்கள் 591:2014 இன் 5.15 ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் பாரமான உலோகப் பரிசீலனை நியமங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) வெளிநாட்டு உற்பத்திக் கம்பனி ஒன்றிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 57,560 அமெரிக்க டொலர் பெறுமதியான 34,244 கிலோ கிராம் டின் மீன்களது பரிசீலனை அறிக்கை திருப்திகரமானதெனக் குறிப்பிட்டு அதனைச் சந்தையிலிடலாமென 2017 ஒக்டோபர் 09 ஆந் திகதி அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், சந்தையில் உள்ள இக்கையிருப்பு நியமத்திற்கு இனங்காதவாறு உள்ளதால் அதனைச் சந்தையிலிருந்து அகற்றுமாறு 2018 மே 16 ஆந் திகதியன்று சுகாதார போசனை மற்றும் தேசிய மருத்துவ அமைச்சினால் சுகாதாரத் துறை உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

**(இ) இறக்குமதி செய்யப்பட்ட மாகரினது நியமத்தைப் பரிசீலித்தல்**

(i) மீளாய்வாண்டின்போது வெளிநாட்டு உற்பத்தி கம்பனி ஒன்றிடமிருந்து 28 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட 482,736 அமெரிக்க டொலர் பெறுமதியுடைய 607,800 கிலோ கிராம் மாகரினின் பொருட்டு இலங்கை நியமங்கள் 1427:2011 இன் 5.6 ஆம் பிரிவின் பிரகாரம் பாரமான உலோகப் பரிசீலனை மேற்கொள்ளப்படவில்லை. அதில் 14 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட 245,426 அமெரிக்க டொலர் பெறுமதியுடைய 306,600 கிலோ கிராம் மாகரின் சம்பந்தமாக 5.5 ஆம் பிரிவில் குறிப்பிடப்படும் நுண்ணுயிர் பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ii) தெரிவுச் செவ்வைகளின் மூலம் பெறப்படும் பரிசீலனை அறிக்கைகளது பெறுபேறுகளைத் கவனத்திற் கொண்டு சந்தையில் பொருட்களை விநியோகிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமாயினும், 6 சந்தர்ப்பங்களில் இறக்குமதி செய்யப்பட்ட 98,073 அமெரிக்க டொலர் பெறுமதியுடைய 86,655 கிலோ கிராம் மாகரினது பரிசீலனை அறிக்கை பெறப்படுவதற்கு முன்னரே சந்தையிலிடப்படுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்தது.

**(ஈ) இறக்குமதி செய்யப்பட்ட குழந்தைகளுக்கான சவர்க்காரத்தினது நியமத்தை பரிசீலித்தல்**

(i) 2016 முதல் 2018 மே வரை 24 சந்தர்ப்பங்களில் வெநிநாட்டு கம்பனி ஒன்றிடமிருந்து இறக்குமதி செய்யப்பட்ட 190,727 கிலோ கிராம் குழந்தைகளுக்கான சவர்க்காரம் தெரிவுச் செவ்வைக்குள்ளானபோதும், அதில் 23 சந்தர்ப்பங்களிலும் குறித்த நியமத்தில் குறிப்பிடப்பட்ட 6 அளவு கோல்களில் 4 அளவு கோல்கள் மாத்திரமே பரிசீலனைக்குள்ளாகியிருந்தன.

(ii) இருபது சந்தர்ப்பங்களில் 152,853 கிலோ கிராம் கையிருப்பை தெரிவுச் செவ்வைகள் மேற்கொள்ளப்படும் வரை இறக்குமதியாளரது பிரத்தியேக உத்தரவாதத்தின் மீது அவற்றை இறக்குமதியாளரின் களஞ்சியத்திற்கு அனுப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அவதானிக்கப்பட்டது. சுங்கத்தின் முத்திரை பொறிக்கப்படாமையால் கையிருப்பு சந்தையிலிடப்படாதிருப்பதை உறுதி செய்வதன் பொருட்டு பிரத்தியேக பிணையைப் பெறுவதானது போதுமானதா என்பது கணக்காய்வில் சர்ச்சைக்குரியதானது.

**(உ) நியமத்துடனான பாதுகாப்புத் தலைக் கவசத்தைச் சந்தையிலிடுவதை உறுதி செய்தல்**

---

மீளாய்வாண்டின் மார்ச் 20 ஆந் திகதி வெளிநாட்டு உற்பத்திக் கம்பனியொன்றிடமிருந்து 20,885 அமெரிக்க டொலர் பெறுமதியுடைய 7,536 ஹெல்மட்கள் இறக்குமதி செய்யப்பட்டிருந்ததுடன், இக்கையிருப்பை இறக்குமதியாளரின் களஞ்சியத்திற்கு அனுப்பி வைக்கலாம் எனவும் நியமம் பெறப்பட்டதன் பின்னர் சந்தையிலிடப்படலாம் எனவும் 2017 ஏப்ரல் 04 ஆந் திகதி இலங்கை சுங்கம் அறிவித்திருந்தது. பின்னர் பெறப்பட்ட பரிசீலனை அறிக்கையின் பிரகாரம் குறித்த கையிருப்பு நியமத்தில் குறிப்பிடப்பட்ட 2 தேவைகளுடன் இணங்காதிருப்பதால் மீள ஏற்றுமதி செய்யப்பட வேண்டுமென 2017 மே 19 ஆந் திகதி இறக்குமதியாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்தது. எனினும், மொத்தக் கையிருப்பும் விற்பனை செய்யப்பட்டு விட்டதாக 2017 யூன் 02 ஆந் திகதி இறக்குமதியாளர் அறிவித்திருந்தார்.

**(ஊ) நியம இலச்சினையுடனான அனுமதிப்பத்திரங்களை வழங்குதலும் இரத்துச் செய்தலும்**

---

(i) உற்பத்திக் கம்பனி ஒன்று குறிப்பிடப்பட்டதொரு வர்த்தகச் சின்னத்துடன் அயடின் கலந்த சாதாரண உப்புக்கெனப் பெற்றிருந்த அனுமதிப்பத்திரத்தின் செல்லுபடிக் காலம் 2017 பெப்ரவரி 09 ஆந் திகதி முடிவடைந்திருந்தது. 2017 மார்ச் 14 ஆந் திகதி நிறுவகம் அனுமதிப்பத்திரத்தை புதுப்பிப்பதற்காக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின்போது தொழிற்சாலை வளாகம் முறையாக பேணப்பட்டிராமை காரணமாக நியமத்திற்கு ஒவ்வாதிருப்பதாக அவதானித்திருந்தது. எவ்வாறாயினும், அனுமதிப்பத்திரம் 6 மாதங்களுக்கு நீடிக்கப்பட்டிருந்ததுடன், 2017 மார்ச் 14 ஆந் திகதி பெறப்பட்ட தெரிவுச் செவ்வை அறிக்கைக்கு முன்னர், அனுமதிப்பத்திரம் காலாவதியாகிய 6 மாதங்களுக்கு மேற்பட்ட காலத்தின் பின்னர் 2017 ஆகஸ்ட் 28 ஆந் திகதி பெறப்பட்டிருந்தது. அவ்வறிக்கையின் பிரகாரம், 3 அளவு கோல்களில் தேர்ச்சி பெறாது போயிருந்தும், மீண்டும் 10 மாத காலத்திற்கு அனுமதிப்பத்திரம் நீடிக்கப்பட்டிருந்ததுடன் மீண்டும் பரிசீலனைக்காக தெரிவுச் செவ்வை மேற்கொள்ளப்படுவதானது இரண்டாவது தடவையாக கால நீடிப்பு வழங்கப்பட்டு 9 மாதங்களின் பின்னரே மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ii) அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்வதற்கான வழிகாட்டலின் (PR-CP-08) 5.2.2, 5.2.4, 5.2.5 பிரிவுகளின் பிரகாரம் அனுமதிப்பத்திரத்தை இரத்துச் செய்யும்போது SLS அடையாளம் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டுள்ளதா என்பதைப் பரிசீலிக்க வேண்டுவதுடன், இரத்துச் செய்யப்பட்டமை தொடர்பாக ஊடகங்களின் மூலம் பிரசித்தப்படுத்தப்படவும் வேண்டும். கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் 14 அனுமதிப்பத்திரங்கள் இரத்துச் செய்யப்பட்டிருந்தன. எனினும், வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.

மேலும், அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்படுமிடத்து நிறுவனம் ஒன்றிற்கு வழங்கப்படும் மூல அனுமதிப்பத்திரத்தைத் திருப்பி பெறுதல், குறித்த நாளன்று ஒவ்வொரு நிறுவனத்திலும் SLS இலச்சினையுடன் எவ்வளவு பொருட்கள் சந்தையில் உள்ளன போன்ற மதிப்பீட்டைப் பெறுதல், தற்சமயம் SLS இலச்சினையுடனான லேபல்கள் நிறுவனத்திடம் இருப்பின் அந்த லேபல்களில் உள்ள SLS இலச்சினையை அகற்றுமாறு அறிவித்தல் மற்றும் வர்த்தகப் பிரசார ஊடகங்களில் SLS இலச்சினையைத் தொடர்ந்து பயன்படுத்தப்படாதிருப்பதை உறுதி செய்தல் போன்ற தொடர் நடவடிக்கைகள் பின்பற்றப்படவில்லை.

(iii) SLS இலச்சினையை அனுமதியின்றிப் பயன்படுத்துவதை தவிர்ப்பதற்கு, அனுமதிப்பத்திரம் இரத்துச் செய்யப்பட்டவுடனேயே உற்பத்தியாளர்களுக்கு அறிவிக்கப்பட வேண்டியபோதும், 2016 ஆம் ஆண்டில் இரத்துச் செய்யப்பட்ட 13 அனுமதிப்பத்திரங்கள் சம்பந்தமாக உற்பத்தியாளர்களுக்கு அறிவிப்பதில் இரத்துச் செய்யப்பட்ட நாட் தொடக்கம் 02 முதல் 16 மாதங்கள் கடந்திருந்தன.

## 4.2 முகாமைத்துவச் செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

### (அ) தெரிவுச் செவ்வைகளை மேற்கொள்ளுதல்

(i) மீளாய்வாண்டில் இறக்குமதி செய்யப்பட்ட உணவு மற்றும் உணவு அல்லாத 344 பொருட்களைத் தெரிவுச் செவ்வை செய்வதற்கான மாதிரிகளைப் பெற்று 2018 ஆகஸ்ட் மாதமளவில் 07 முதல் 19 மாத காலம் கடந்திருந்த போதிலும், பரிசீலனை அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், அந்த 344 மாதிரிகளில் 157 தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வுப் பரிசோதனையின்போது 97 பொருட்கள் சந்தையில் வெளியிடப்படுவதற்கான அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், பொருட்களை விற்பனை செய்யலாகாதென பிரத்தியேக பிணையைப் பெற்றதன் பின்னர் 58 பொருட்களது கையிருப்பை இறக்குமதியாளரது களஞ்சியத்திற்கு அனுப்புவதற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டுமிருந்தது.

(ii) 2014 சனவரி 08 ஆந் திகதிய 1844/49 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதி விசேட வர்த்தமானியின் பிரகாரம் இலங்கை நியமங்கள் நிறுவனத்தினது பணிப்பாளர் நாயகத்தின் அங்கீகாரமின்றி இறக்குமதியாளர் ஒருவர் பொருட்களை விற்பனை செய்தல், பயன்படுத்தல் அல்லது விநியோகித்தலாகாது. அது சம்பந்தமாக நிறுவனத்திற்கும் இலங்கை சுங்கத்திற்கும் இணைந்த பொறுப்பு இருப்பதுடன், அதற்கமைய தடை செய்வதற்கான முத்திரையை பொறிப்பதற்கான சிபார்சை வழங்குவதில் அல்லது மூன்றாம் நபரிடமிருந்து பிணையைப் பெறுதல் ஆகியவற்றை அமுலாக்குவது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தீக்குச்சிகளை உற்பத்தி செய்வது தொடர்பான இலங்கை நியமங்களது இலச்சினையைப் பெறுவது 2012 தொடக்கம் கட்டாயமாக்கப்பட்டிருந்ததுடன், அதன் பொருட்டு 22 உற்பத்தியாளர்கள் பதிவு செய்யப்பட்டிருந்தனர். எவ்வாறாயினும், அனுமதிப்பத்திரத்தை வழங்குகையில் 4.3 ஆம் நியமத்தின் பிரகாரம் மேற்கொள்ளப்பட வேண்டிய பாதுகாப்பு தொடர்பான பரிசீலனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. இதற்கான பதிலாக, அப்பரிசீலனையை மேற்கொள்வதற்கு இலங்கையில் ஆய்வுகூட வசதிகள் கிடையாது என முகாமைத்துவம் அறிவித்திருந்தது.

(இ) இலங்கை நியமங்கள் நிறுவகத்தின் ஆட்சேர்ப்பு நடைமுறையின் பிரகாரம் 08 ஆம் சேவைத் தரத்தில் உள்ள ஊழியர்களை சேவையில் நிரந்தமாக்குவதற்கு முன்னர் முதலாவது வினைத் திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியடைய வேண்டுமாயினும், வினைத் திறமை காண் தடைப் பரீட்சையை நடாத்துவதற்கு நிறுவகம் நடவடிக்கையை மேற்கொண்டிருக்கவில்லை.

கணக்காய்வுத் தெரிவுப் பரிசோதனையின் பிரகாரம், 2013, 2014 ஆம் ஆண்டுகளின்போது ஆட்சேர்க்கப்பட்ட 38 ஊழியர்கள் 2016, 2017 ஆம் ஆண்டுகளில் சேவையில் நிரந்தரமாக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் 3 ஆண்டு கால சேவையைப் பூர்த்தி செய்திருந்தபோதும், வினைத் திறமை காண் தடைப் பரீட்சையில் சித்தியெய்த வேண்டிய தேவையைப் பூர்த்தி செய்திருக்கவில்லை.

**(ஈ) ஊக்குவிப்புப் படியைக் கொடுப்பனவு செய்தல்**

மாதாந்த திரண்ட உள்ளவாறான வருமானம் மற்றும் மாதாந்த இலக்கிடப்பட்ட வருமானம் என்பவற்றுக்கிடையேயான மாற்றங்களை அடிப்படையாகக் கொண்டு மீளாய்வாண்டின்போது ஊக்குவிப்புப் படியாக ரூபா 25,024,326 நிறுவகத்தின் பதவியணியினருக்கு கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. இது தொடர்பாகப் பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒவ்வொரு பிரிவினதும் இலக்கிடப்பட்ட வருமானத்தைக் கணிப்பிட்டு விதிமுறைகள் மற்றும் அவ்விலக்கை எய்துவதற்கு வேண்டிய வழிவகைகள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ii) ஒவ்வொரு பிரிவுக்குமான இலக்கு வழங்கப்படுகையில் அப்பிரிவுகள் சென்ற ஆண்டில் பெற்ற வெற்றி கருத்திற் கொள்ளப்படுமெனக் குறிப்பிடப்பட்டபோதும், முன்னைய ஆண்டில் அடைந்த முன்னேற்றத்திற்கு ஒத்ததாக நிறுவனத்தின் 09 பிரிவுகளில் 08 பிரிவுகளுக்கு குறைந்த இலக்கு வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய, 2016 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் உள்ளவாறான வருமானம் ரூபா 747,488,328 ஆகியபோதும், மீளாய்வாண்டிற்கென வழங்கப்பட்ட இலக்கிடப்பட்ட வருமானம் ரூபா 624,890,000 ஆகும்.

(iii) இந்த ஊக்குவிப்புப் படிக் கொடுப்பனவின் காரணமாக நிறுவகத்தின் வருமானம் அதிகரித்துள்ளதாக 2017 டிசெம்பர் 20 ஆந் திகதிய பணிப்பாளர் சபைத் தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்தபோதும், முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டில் அடையப் பெற்ற வருமானம் ரூபா 7,840,817 குறைவடைந்திருந்தது.

## 4.3 செயற்பாட்டு நடவடிக்கைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின்போது ரூபா 32,376,278 கிரயமுடைய பயன்படுத்த முடியாததாக இனங்காணப்பட்ட நிலையான சொத்துக்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு 2017 மார்ச் 27 ஆந் திகதியன்று பணிப்பாளர் சபை தீர்மானித்திருந்தது. இச்சொத்துக்கள் இலங்கை இராணுவத்திடம் வழங்கப்பட்டதாகக் குறிப்பிடப்பட்டபோதும், முறையாக ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான சான்று கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) எரிபொருள் விலைப்பட்டியல் புத்தகங்கள் சம்பந்தமாக 2017 நவெம்பர் 30 ஆந் திகதி மேற்கொள்ளப்பட்ட பரிசீலனையின்போது திகதி மற்றும் வாகன இலக்கம் மாத்திரமே குறிப்பிடப்பட்டு பெறுமதியும் அளவும் உள்ளடக்கப்பட வேண்டிய கோட்டில் எதுவுமே பதியப்படாது 36 புத்தகங்களில் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர் கைச்சாத்திட்டிருந்தமை அவதானிக்கப்பட்டது. வாகனக் கட்டுப்பாடு சம்பந்தமாக நிறுவகத்தில் போதியளவு உள்ளகக் கட்டுப்பாடு அமுலாகாதிருப்பது மேலும் அவதானிக்கப்பட்டது.

(இ) இரசாயனப் பொருட்கள் அவ்வவ்போது பரிசீலனைக்குட்படுத்தப்பட்டு காலாவதியாகும் போது அவற்றைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு முறையான விதிமுறைகள் நிறுவகத்தால் கடைப்பிடிக்கப்படாததுடன், இரசாயனப்பொருள் களஞ்சியத்திலுள்ள 1996 முதல் 2015 வரையான காலப்பகுதியின்போது காலாவதியாகிய 25 இரசாயனப்பொருட்களைக் கைதவிர்ப்புச் செய்வதற்கு மீளாய்வாண்டின் இறுதியளவிலும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. மேலும், 10 ஆண்டுகளுக்கு மேலாக வழங்கப்படாதிருக்கும் ரூபா 670,626 கிரயமுடைய 103 ஆய்வுகூட கண்ணாடி உபகரணங்கள் மற்றும் ரூபா 1,839,338 கிரயமுடைய 454 இரசாயனப் பொருட்கள் என்பன மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு களஞ்சியத்தில் பயன்படுத்தப்படாதிருந்தன.

## 4.4 பதவியணி நிர்வாகம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) Dms/1610/VOL-1m இலக்கமுடைய 2016.12.22 ஆந் திகதிய முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தின் கடிதம் மூலம் உதவிப் பணிப்பாளர் (தொழில்நுட்பம்) பதவியில் உள்ள 15 வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தபோதும், 2017 நவெம்பர் 01 ஆந் திகதி குறித்த பதவிக்கு 19 பேர் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர். மேலதிக ஆட்சேர்ப்புக்கான அங்கீகாரத்தைப் பெற்றதற்கான சான்று கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படவில்லை.

(ஆ) குறித்த ஆட்சேர்ப்பு நடைமுறையின் 5.4.1 ஆம் பிரிவின் பிரகாரம், எழுத்து மூலம் பரீட்சை நடாத்தப்பட்டு தெரிவு மேற்கொள்ளப்பட வேண்டுமாயினும், அதற்கு முரணாக மீளாய்வாண்டின்போது முகாமைத்துவ உதவியாளர் (தொழில்நுட்பம் அல்லாத) பதவிக்கு 06 பேரும் கனிஷ்ட முகாமையாளர் (தொழில்நுட்பம்) பதவிக்கு 10 உத்தியோகத்தர்களும் ஆட்சேர்க்கப்பட்டிருந்தனர்.

## 5. நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி

நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 நிகழ்ச்சி நிரலின் பிரகாரம் சகல அரச நிறுவனங்களும் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமாயினும், மீளாய்வாண்டின் பொருட்டு இலங்கை நியமங்கள் நிறுவகம் தனது பரப்பெல்லைக்குள் வரும் பணிகள் சம்பந்தமாக எவ்வாறு செயற்படுவது என்பதை அறிந்திருந்தும், நிலைத்து நிற்கவல்ல அபிவிருத்தி நோக்கம், இலக்கு மற்றும் அவ்விலக்கை அடைவதற்கான வழிவகைகள், இலக்கை எய்தியமையை அளவிடுவதற்கான சுட்டுகளை இனங்காண்பதற்குமான நடவடிக்கைகளை மேற்கொண்டிருக்கவில்லை. அவ்வாறே, இலக்கை அடைவதை அளவிடுவதற்கான உரிய தரவு முறைமையை உருவாக்குவதற்கு தேவையான நிதி ஏற்பாடு, பயிற்றப்பட்ட ஊழியர்கள் அல்லது பௌதீக வசதிகளுக்கான தேவைகளையும் இனங்கண்டிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பொருட் கொள்வனவு

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 4.2.1(இ) க்கமைய, பொருட் கொள்வனவு செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான காலத்தை தீர்மானிக்கும் விதத்தில் விரிவான பொருட் கொள்வனவு திட்டத்தை நிறுவகம் தயாரித்திருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டின்போது நிறைவேற்றுவதற்குத் திட்டமிடப்பட்ட ரூபா 424.23 மில்லியன் பெறுமதியான 49 பொருட் கொள்வனவுகளில் ரூபா 206 மில்லியன் பெறுமதியான 04 பொருட் கொள்வனவு, குறித்த பிரிவுகளிலிருந்து கொள்வனவுக்கான கோரிக்கைகள் கிடைக்கப்பெறாததாலும் மாதிரிப் படிவங்கள் தயாரிக்கப்படாமையாலும் மீளாய்வாண்டின் டிசெம்பர் 31 ஆந் திகதியளவிலும் ஆரம்பிக்கப்படாதிருந்ததுடன், ரூபா 29 மில்லியன் பெறுமதியான 11 பொருட் கொள்வனவு, கேள்விகளுக்கான அழைப்புக் கட்டத்திலும் கேள்விகளைப் பகுப்பாய்வு செய்யும் கட்டத்திலேயுமே இருந்தன. பொருட் கொள்வனவுத் திட்டத்தில் பெருமளவு பொருட்கள் உள்ளடங்கியுள்ளமையால் அவை அவ்வவ்போது மீளாய்வு செய்யப்பட்டு மறுசீரமைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 6.3.3(ஆ) க்கமைய கேள்வி கோரலுக்கான காலம் முடிவடைவதைத் தொடர்ந்து இயலுமானளவு விரைவில் கேள்வியைச் சமர்ப்பித்தவர் அல்லது அவரது பிரதிநிதி ஒருவரின் முன்பாக கேள்விகள் திறக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், ரூபா 11,735,546 பெறுமதியான 7 உபகரணக் கொள்வனவு கூறு விலைக் கோரல் கடிதங்களில் கேள்விகள் திறக்கப்படும் நேரம் மற்றும் அச்சந்தர்ப்பத்தில் பிரசன்னமாகுமாறு அழைப்பும் உள்ளடக்கப்பட்டிருக்காததுடன், கேள்வி கோரல் முடிவடைந்து கேள்வி திறப்பதற்கான காலம் 06 முதல் 35 நாட்கள் வரை நீடித்திருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

(ஈ) அரசாங்க பொருட் கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 8.9.1(ஆ) இன் பிரகாரம் ரூபா 500,000 க்கு மேற்பட்ட பொருட் கொள்வனவின்போது வழங்குனர்களுடன் முறையான உடன்படிக்கைகளில் ஈடுபடவேண்டுமாயினும், ரூபா 23,272,050 பெறுமதியான 08 உபகரணங்களது கொள்வனவுகளுக்கு உடன்படிக்கைகளில் ஈடுபடவில்லை.

(உ) ஒருங்கிணைந்த முகாமைத்துவத் தகவல் முறைமையை அறிமுகஞ் செய்வதற்கான மதியுரைச் சேவையைப் பெறுவதற்கு 2017 ஆம் ஆண்டின் போது மதியுரைச் சேவை நிறுவனம் ஒன்றுடன் ரூபா 5,000,000 பெறுமதியிலான உடன்படிக்கை செய்து கொள்ளப்பட்டது. தேசிய பொருட் கொள்வனவு முகவர் நிலைய வழிகாட்டியின் 2.6.3 க்கமைய மதியுரைப் பொருட் கொள்வனவுக் குழு நிறுவனத்தின் பிரதான கணக்களி உத்தியோகத்தராலேயே நியமிக்கப்பட வேண்டுமாயினும், இப்பொருள் கொள்வனவுக்கான மதியுரைப் பொருட் கொள்வனவுக் குழு நிறுவனத்தால் நியமிக்கப்பட்டிருந்தது. மேலும், 2.3.1(c) மற்றும் 2.3.1(d) வழிகாட்டல்களின் பிரகாரம் அபிலாஷைக் கூற்றைப் பெறும் அறிவிப்பு, முன்மொழிவுக்கான வேண்டுகோள் (Request for proposal) என்பன தயாரிக்கப்பட்டு மதியுரைச் சேவை பொருட் கொள்வனவு குழுவின் அங்கீகாரம் பெறப்பட்டிராததுடன், 6.2.1, 7.1.1(b), 8.8.2 வழிகாட்டலின் பிரகாரம் போட்டியுடனான நிறுவனங்களிடமிருந்து முன்மொழிதல்கள் பெறப்பட்டு, பகுப்பாய்வு மேற்கொள்ளப்பட்டு, பொருத்தமான நிறுவனம் தெரிவு செய்யப்பட வேண்டுமாயினும், அவ்வாறல்லாது ஒரு நிறுவனத்திடமிருந்து மாத்திரமே கூறு விலை கோரப்பட்டு அந்நிறுவனம் தெரிவு செய்யப்பட்டிருந்தது.

## 6.2 வரவு, செலவுத் திட்டக் கட்டுப்பாடு

வரவு, செலவுத் திட்டமிடப்பட்ட மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினப் பெறுமதிகளுக்கிடையே 15 சதவீதம் முதல் 407 சதவீதம் வரையிலான வேறுபாடுகள் நிலவியமையால் வரவு, செலவுத் திட்டமானது பயனுள்ள முகாமைத்துவக் கட்டுப்பாட்டுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின்போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வவ்போது நிறுவகத் தலைவரது கவனத்திற்குக் கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறை | | | அவதானிப்புகள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | | கையிருப்புப் பேரேடு முறையாகப் பேணப்படாமை. |
| (ஆ) | கையிருப்புக் கட்டுப்பாடு | (i) | பேணப்பட்ட கணனி முறைமையில் கையிருப்பு சம்பந்தமான சில தகவல்களைப் பெற முடியாது போனமை. |
| | | (ii) | பொருட் பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாமை |
| | | (iii) | கையிருப்புக் கட்டுப்பாட்டு விதிமுறைகளைக் கடைப்பிடிக்காமை. |
| (இ) | பெற வேண்டிய மற்றும் கொடுப்பனவு செய்ய வேண்டிய கணக்குகள் | | பெற வேண்டிய மீதிகளை அறவிடுவது தொடர்பான தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை. |
| (ஈ) | நிலையான சொத்துக் கட்டுப்பாடு | (i) | போதியளவு தகவல்கள் நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்படாமை. |
| | | (ii) | நிலையான சொத்துப் பதிவேட்டில் சொத்துக்களுக்குரிய விடயங்களில் ஏற்படும் மாற்றங்கள் அதிகாரம் பெற்ற உத்தியோகத்தரால் கைச்சாத்திடப்படாமை |
| (உ) | வாகனக் கட்டுப்பாடு | (i) | சம்பவப் பதிவேடுகள் முறையாக பேணப்படாமை |
| | | (ii) | எரிபொருள் நுகர்வு பரிசீலிக்கப்படாமை |
| | | (iii) | ஓட்ட அட்டவணைகள் முறையாகப் பேணப்படாமை |
| | | (iv) | எரிபொருள் விலைப்பட்டியல் பிரதியிலும் இன்வொய்சிலும் உள்ள விபரங்களுக்கிடையே வேறுபாடுகள் நிலவியமை. |
| (ஊ) | ஊழியர் முகாமைத்துவம் | | பெயர் வழிக் கோவைகள் முறையாகப் பேணப்படாமை |
| (எ) | பொருட் கொள்வனவு | | பொருட் கொள்வனவு வழிகாட்டியைக் கடைப்பிடிக்காமை |
| (ஏ) | ஆய்வுகூட கட்டுப்பாடு | | பரிசீலனைகளை அநாவசியமாகத் தாமதித்தலும் தகவல் முகாமைத்துவ முறைமையைப் பயன்படுத்தாமையும் |
| (ஐ) | தகவல் தொழில்நுட்ப முறைமை | (i) | தகவல் ஊடக தொழில்நுட்பக் கொள்கை ஒன்றை தயாரிக்காமை |
| | | (ii) | தகவல் தொழில்நுட்ப முறைமை சம்பந்தமாக போதியளவு பாதுகாப்பு விதிமுறைகள் பின்பற்றப்படாமை |

| | | | |
|---|---|---|---|
| | | (iii) | சில தகவல்களைப் பெறுவதில் வசதியின்மை நிலவுதல். |
| | | (iv) | ஒவ்வொரு முறைமைகளுக்குமிடையே உள்ளக ஒருங்கிணைப்பு இன்மை. |
| | | (v) | முறைமையின் சில பிரிவுகள் நாளதுவரையாக்கப்பட்டு பேணப்படாமை |
| (ஒ) | கோவைகளின் கட்டுப்பாடு | (i) | கோவைகளுக்கு இலக்கமிடப்படாமை. |
| | | (ii) | வெளி நபர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்களில் தொடர்பு இலக்கங்கள் குறிப்பிடப்படாது வழங்கப்பட்ட சந்தர்ப்பங்கள் நிலவியமை |